
கடவுள் துணை

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் செய்தருளிய

# ப்ரச்நோத்திர ரத்ன மாலிகா

## வினா - விடை



வெளியீடு:-

அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

22-07-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


சிவமயம்

# ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

செய்தருளிய

# ப்ரச்நோத்ர ரத்தின மாலிகா

(வினா - விடை)



மீள் வெளியீடு:
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
காந்தி நிலையம்
உருத்திரபுரம்
கிளிநொச்சி
காந்தி ஆண்டு – 143

**2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எம்முரையைப் பதிப்புரை, முன்னுரை மதிப்புரை என எங்ஙன மேனும் கொள்ளலாம். மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்மவள்ளல் கனகராசா அவர்கள் காலந்தோறும் திருமுறைகள், திருக்குறள், இதிகாசங்கள், இதோபதேசங்கள், அறவுரைகள் தாங்கிய கைநூல்களை வெளியிட்டுவருவதை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் என்றின்னோரன்ன இனியவர்கள் நன்கறிவர்.

இந்துமதம், சனாதனதர்மம், பாரதப்பண்பாடு சம்பந்தமாக மனு, சுக்கிரர், பத்துருஹரி, விதுரர், சங்கரர் என்ன சொன்னார்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்று வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழன்பர்கள் இடைக்கிடை கடிதங்கள் மூலம் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

அவர்கள் வேண்டுகோளை நிறைவுசெய்வதற்கு மிகச் சிறிய அளவிலமைந்த இச்சுவடி வினாவிடை வடிவில் வெளிவருகின்றது. இது சங்கராச்சாரிய சுவாமிகள் செய்த ப்ரச்நோத்ர ரத்னமாலிகா என்னும் நூலைத் தழுவியது. இஃது இதே வடிவில் ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் என்னும் திங்கள் வெளியீட்டில் சென்றமாதம் வெளிவந்தது. இதனைப் பெரிதும் விரும்பிய தொழிலதிபர், இஃது இன்றைய மாணாக்கர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படுமெனக்கருதி, இதனை வெளியிடுவதற்கு உரிய முறையில் ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்திற்கு விண்ணப்பித்து உடன்பாடு பெற்றுள்ளார். இதனை வெளியிடுவதற்கு அனுமதியளித்த மேலிடத்தாருக்கு எம் நன்றி உரித்தாகுக.

## சங்கராச்சாரிய சுவாமிகள்

திருமூலர் வடக்கிலிருந்து தெற்குநோக்கி வந்தவாறு சங்கரர் தெற்கிலிருந்து வடக்குநோக்கிச் சென்றவர். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரையும், கண்ணப்ப நாயனாரையும் நன்கு போற்றும் சங்கராசாரிய சுவாமிகள் பெரிய சிவபக்தர். அவர் சிவதத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தை விளக்கி அற்புதமான நூல்கள் செய்துள்ளார். அன்றி மூன்று பெருநூல்கள் என மதிக்கப்பெறும் உபநிடதங்கள், பகவத்கீதை, பிரம்மசூத்திரம் ஆகியவற்றுக்கு அகலவுரை எழுதி யுள்ளார்.

பாரதநாடெங்கும் யாத்திரை செய்து ஆங்காங்கே பகவானுக் குரிய முறையில் பக்திநெறியைப் பரப்பி பல்வேறிடங்களில் மடங் களை நிறுவிப் பணிபுரிய வைத்துள்ளார். சிவன், சக்தி, விஷ்ணு, விநாயகர், சுப்பிரமணியர், சூரியன் ஆகிய ஆறு வேறுருவங்க ளில் நம்மவர் வணங்குவதெல்லாம் சிவனையே சாரும் என்று வழிப்படுத்தியுள்ளார். சிவனை வணங்கும் நியமம் பூண்ட அவர் சிவனையன்றி மற்றத் தெய்வ மூர்த்தங்களை வணங்கவேண்டா மென்று சொல்லவில்லை. சங்கராசாரியர் வேதங்களுக்கு மிகுந்த மதிப்புக் கொடுத்தவர். வேதம் பரப்பிரம்மத்தின் ஞான வடிவம் என்பது அவரின் கோட்பாடு. வேதங்கள் இறைவனைப் போல் என்றும் அழியாதவை. வேதங்கள் கூறும் உண்மையான ஞானத்தை எல்லோரும் அறிந்து இன்புறுதல் வேண்டும் என்பது சங்கராசாச்சாரியரின் நோக்கம்.

வேலை செய்தல், வழிபாடு செய்தல், மனதைத் தூய்மைப்படுத் தல் இவை மூன்றும் மனிதவர்க்கத்துக்குரிய மகத்தான பணிகள் என்பர். சுயநலம் கருதிச்செய்யும் பணி பற்றுக்குக் காரணமாகித் துன்பந்தரும் என்பர். பொதுநலம் கருதிச் செய்யும் பணிகளால் மனமாசுகளைப் போக்கலாம் என்பர். மனத்தூய்மை பெறுதலே ஆன்ம ஈடேற்றத்துக்குரிய வழி என்பர். ஞானத்தை வெகுவாகப் போதித்த சங்கரர் கர்மத்தையும் நன்கு சொல்லியுள்ளார்.

கலியுகத்தாருக்குப் பக்தியிலக்கியஞ்செய்த திருநாவுக்கரசு நாய னார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், காரைக்காலம்மை யார், திருமூலநாயனார் வழியில் பக்தியிலக்கியஞ் செய்த சங் கராச்சாரியர், கண்ணப்ப நாயனாரின் பக்தியை வெகுவாக வியந்து போற்றியுள்ளார். வினைகளைப் பற்றியும் மலங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் சொன்ன அவர் சஞ்சிதம், ஆகாமியம் நீங்கிய வர்களான சீவன்முத்தர்களைப் போற்றுகிறார். பிராரத்த கன்மம் அனுபவித்து முடிந்ததும் இந்த உடம்பு விழுந்து விடும் என்பர். சங்கரரின் கோட்பாடு அத்வைத தத்துவம் என வழங்குகிறது.

சங்கரர் தமக்கு முற்பட்ட சாங்கியம், யோகம் முதலிய தரி சனங்களை நன்கறிந்தவர். தியானஞ் செய்வதற்கு அவை யாவும் இன்றியமையாதனவாகும். அவர் கௌதம புத்தரின் போதனை களையும் நன்கறிந்தவர். வேதங்களை ஏற்றுக்கொள் ளாத புத்தரின் போதனைகளைச் சங்கரர் தழுவியதால் அவரை இரகசியப் புத்தர் எனவும் சிலர் கூறியதுண்டு.

சங்கரர் ஞானம். கர்மம், பக்தி என்பவற்றைத் தழுவிய ஞான மார்க்கம், கர்மமார்க்கம், பக்திமார்க்கம் என்னும் மூன்று வழி களையும் முறையாகக் கூறி மக்களை நெறிப்படுத்தியுள்ளார்.

**பிள்ளைகள் தமக்கும் பெற்றோருக்கும் சமூகத்துக்கும் நல்ல வர்களாய் உருவாகிச் சோம்பலின்றி நன்றாக உழைத்து என்றும் எல்லோருக்கும் நல்லதையே செய்யும் இயல்பினராகி நல் வாழ்வு வாழ்தல் வேண்டும் என்பதே இத்தகைய வெளியீடுகளின் அடிப் படை நோக்கமாகும். எல்லோரும் வாழ்க.**

கந்தமடம்
க. சி. குலரத்தினம்
25.06.81



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக வினா விடை

| | |
|---|---|
| கேள்வி | : பகவானே ஏற்றுக்கொள்ளத்தக்கது எது? |
| பதில் | : குருவின் வார்த்தை. |
| கேள்வி | : தள்ளத்தக்கது எது? |
| பதில் | : செய்யத் தகாதது. |
| கேள்வி | : யார் குரு? |
| பதில் | : உண்மையை அறிந்தவராகவும், எப்பொழுதும் சீடர்களின் நன்மைக்காக முயலுபவராகவும் இருப்பவர். |
| கேள்வி | : வித்துவான்களுக்குச் சீக்கிரம் செய்யத்தக்கது எது? |
| பதில் | : சம்சாரம் தொடர்ந்து வருவதை அறுப்பது. |
| கேள்வி | : மோட்சம் என்னும் மரத்திற்கு விதை எது? |
| பதில் | : சாதனையால் ஏற்படும் தத்துவஞானம். |
| கேள்வி | : மிகவும் இதமானது எது? |
| பதில் | : தர்மம். |
| கேள்வி | : சுத்தமானவர் யார்? |
| பதில் | : எவனுடைய மனம் சுத்தமாக இருக்கிறதோ அவன். |
| கேள்வி | : பண்டிதர் யார்? |
| பதில் | : பகுத்தறிவுள்ளவன். |
| கேள்வி | : விஷம் எது? |
| பதில் | : பெரியோர்களிடம் அவமரியாதை. |
| கேள்வி | : மனிதர்களில் விரும்பத்தக்கது எது? |
| பதில் | : தனக்கும் பிறருக்கும் நன்மைக்காக முயலுதல். |
| கேள்வி | : மதிமயக்கத்தை உண்ணுபண்ணுவது எது? |
| பதில் | : அபிமானம் (பற்று) |
| கேள்வி | : திருடர்கள் யார்? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் : விஷயங்கள் (உலக ஆசைகள்)

கேள்வி : பிறப்பைக் கொடுக்கும் கொடி எது?

பதில் : ஆசை.

கேள்வி : எதிரி யாது?

பதில் : முயற்சியில்லாமை.

கேள்வி : எதிலிருந்து பயம்?

பதில் : சாவிலிருந்து

கேள்வி : பார்வை இல்லாமையைவிடத் தீயது எது?

பதில் : பேராசை கொள்வது.

கேள்வி : சூரன் யார்?

பதில் : பெண்களின் பார்வையாகிற அம்புகளால் அடிபடாதவன்.

கேள்வி : எந்த அமிருதம் ருசியுள்ளது?

பதில் : நல்லோரின் உபதேசம்.

கேள்வி : பெருந்தன்மைக்கு மூலகாரணம் எது?

பதில் : வேண்டாமல் இருப்பது.

கேள்வி : எவன் திறமைசாலி?

பதில் : பெண்களின் நடத்தையால் பேதலிக்கப்படாதவன்.

கேள்வி : துன்பம் எது?

பதில் : சந்தோஷமில்லாமை.

கேள்வி : சிறுமைத்தன்மை எது?

பதில் : தாழ்ந்தோரிடம் யாசிப்பது?

கேள்வி : எது வாழ்க்கை?

பதில் : குற்றமில்லாமை.

கேள்வி : ஜடத்தன்மை எது?

பதில் : படிப்பதில் அப்பியாசம் செய்யாமை.

கேள்வி : எவன் விழித்துக்கொண்டிருக்கிறான்?

பதில் : விவேகமுள்ளவன்.

கேள்வி : பிராணிக்கு எது துக்கம்?

பதில் : மூடத்தன்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : தாமரையிலைத் தண்ணீர் போல் சஞ்சலமானது எது?

பதில் : வாலிபப் பருவமும் பணமும் ஆயுளும்

கேள்வி : சந்திரனது கிரணத்திற்குச் சமமானவர் யார்?

பதில் : நல்ல மானிடர்கள்.

கேள்வி : நரகம் எது?

பதில் : பிறருக்குக் கட்டுப்பட்டிருப்பது.

கேள்வி : சௌக்கியம் எது?

பதில் : எல்லாப் பற்றுதலையும் ஒழித்துவிடுவது.

கேள்வி : பிராணிகளுக்கு எது பிரியம்?

பதில் : பிராணன்

கேள்வி : துன்பத்தைப் பயனாக உடையது எது?

பதில் : அகங்காரம்

கேள்வி : சுகத்தைக் கொடுக்கக்கூடியது எது?

பதில் : சாதுக்களின் நட்பு.

கேள்வி : எல்லாத் துன்பங்களையும் போக்குவதில் எவன் சமர்த்தன்?

பதில் : எல்லா விதத்திலும் தியாகம் செய்கிறவன்.

கேள்வி : எது மரணம்?

பதில் : முட்டாள்தனம்.

கேள்வி : எது விலைமதிக்க முடியாதது?

பதில் : தக்கசமயத்தில் உதவியது.

கேள்வி : சாவுவரை துன்புறுத்துவது எது?

பதில் : ரகசியமாகச் செய்த பாவம்

கேள்வி : முயற்சி செய்யத்தக்கது எது?

பதில் : கல்வி கற்பது, நல்ல மருந்துகளைச் சேமிப்பது அவற்றைப் பிறருக்குக் கொடுப்பது.

கேள்வி : அலட்சியம் செய்யத்தக்கது எதில்?

பதில் : துஷ்டன், பிறர் மனைவி, பிறர்பொருள்.

கேள்வி : இரவுபகலாகச் சிந்திக்கத்தக்கது எது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் : சம்சாரத்தின் சாரமற்ற தன்மை.
கேள்வி : மிகவும் பிரியமாகச் செய்யத்தக்கது எது?
பதில் : ஏழைகளிடம் இரக்கம், சாதுக்களிடம் நட்பு.
கேள்வி : யார் சாது?
பதில் : நல்ல நடத்தையுள்ளவன்.
கேள்வி : யார் அதமன்?
பதில் : கெட்ட நடத்தையுள்ளவன்.
கேள்வி : எவனால் இந்த உலகம் ஜயிக்கப்பட்டது?
பதில் : உண்மையும் பொறுமையுமுள்ள மனிதனால்.
கேள்வி : எவனுக்குத் தேவர்கள் நமஸ்காரம் செய்கிறார்கள்?
பதில் : இரக்கத்தை முக்கியமாகக் கொண்டவனுக்கு.
கேள்வி : நல்ல புத்தியுள்ளவனுக்கு எதிலிருந்து பயம் ஏற்படும்?
பதில் : சம்சாரம் என்னும் கட்டிலிருந்து.
கேள்வி : பிராணிகளின் கூட்டம் யாருக்குக் கட்டுப்பட்டுள்ளது?
பதில் : உண்மையான பிரிய வார்த்தை பேசுகிற வணக்கம் உள்ளவனுக்கு.
கேள்வி : எங்கு நிலைபெற்றிருக்க வேண்டும்?
பதில் : நியாயமான வழியில்.
கேள்வி : குருடன் எவன்?
பதில் : செய்யத்தகாத காரியத்தில் ஈடுபட்டவன்.
கேள்வி : எவன் செவிடன்?
பதில் : நன்மைதரும் வார்த்தைகளைக் கேளாதவன்.
கேள்வி : எவன் ஊமை?
பதில் : தக்கசமயத்தில் பிரியமான வார்த்தைகளைப் பேசத் தெரியாதவன்.
கேள்வி : வருந்தத்தக்கது எது?
பதில் : பணம் இருக்கும்போது கஞ்சத்தனம்.
கேள்வி : சிறப்புள்ளது எது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் : கொடுக்கும் சுபாவம்.

கேள்வி : அறிவாளிகளால் கொண்டாடத்தக்கவன் எவன்?

பதில் : இயற்கையாகவே எப்பொழுதும் வினயமுள்ளவன்.

கேள்வி : வம்சமாகிற தாமரையை மலரவைக்கும் சூரியன் யார்?

பதில் : நற்குணங்களால் பெருமையுற்ற போதிலும் வணக்கமுள்ளவன்.

கேள்வி : இந்த உலகம் எவனுக்கு அதீனமாக உள்ளது?

பதில் : பிரியமாயும் இதமாயும் வார்த்தை பேசி, தர்மத்தில் ஈடுபட்டவனுக்கு.

கேள்வி : அறிவாளிகளின் மனதைக் கவருவது எது?

பதில் : நல்ல கவிதையும் : ஞானம் என்ற பெண்ணும்.

கேள்வி : ஆபத்து யாரைத் தொடாது?

பதில் : பெரியோர் வார்த்தைப்படி நடக்கும் அடக்கம் உள்ளவனை

கேள்வி : லஷ்மி யாரிடம் ஆசைப்படுகிறாள்?

பதில் : சோம்பல் இல்லாத மனமுள்ள நியாயமான நடத்தையுள்ளவனிடம்.

கேள்வி : லஷ்மி திடீரென்று எவனை விட்டுவிடுகிறாள்?

பதில் : அறவோர், ஆசார்யர், தேவதை இவர்களைப் பழிப்பவனையும், சோம்பலுள்ளவனையும்.

கேள்வி : எங்கே வாசம் செய்ய வேண்டும்?

பதில் : நல்ல ஜனங்களின் அருகில் அல்லது காசிஷேத்திரத்தில்.

கேள்வி : எந்தத் தேசம் விலக்கத்தக்கது?

பதில் : கோள் சொல்பவர்களுடன் கூடியதும் லோபியான அரசனையுடையதுமான நாடு விலக்கத்தக்கது.

கேள்வி : இவ்வுலகில் எவன் வருந்தத்தக்கவன்?

பதில் : பணம் இருந்தும் கொடுக்காதவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : ராமனைவிட வீரன் யார்?
பதில் : காமபாணத்தால் அடிபட்டுச் சலிக்காதவன்.
கேள்வி : இரவும் பகலும் நினைக்கத்தக்கது எது?
பதில் : பகவானின் திருவடி , சம்சாரம் அல்ல
கேள்வி : கண் இருந்தும் குருடர் யார்?
பதில் : நாஸ்திகர்.
கேள்வி : பிரசித்தமான நொண்டி யார்?
பதில் : முதுமையில் புண்ணிய தீர்த்தம் செல்கிறவன்.
கேள்வி : முக்கியமான தீர்த்தம் எது?
பதில் : எது மனதின் அழுக்கைப் போக்குகிறதோ அது.
கேள்வி : நல்லபுத்தி உள்ளவனால் சொல்லத்தகாதது எது?
பதில் : பிறரின் குற்றமும் பொய்யும்.
கேள்வி : மனிதர்களால் சம்பாதிக்கத்தக்கது எது?
பதில் : கல்வி, பொருள், பலம், புகழ், புண்ணியம்
கேள்வி : எல்லா நல்லகுணங்களையும் நீக்கிவிடுவது எது?
பதில் : பேராசை.
கேள்வி : எதிரி யார்?
பதில் : காமம்.
கேள்வி : எந்தச் சபை விலக்கத்தக்கது?
பதில் : வயதான மந்திரி இல்லாத சபை.
கேள்வி : பிராணனைவிடச் சிறந்தது எது?
பதில் : குலதர்மம். சாதுக்களின் சேர்க்கை.
கேள்வி : காப்பாற்றத் தக்கது எது?
பதில் : புகழ், கற்பு, சுயபுத்தி.
கேள்வி : அழியாத ஆலமரம் எது?
பதில் : சாஸ்திரப்படி நல்ல பாத்திரத்தில் கொடுக்கப்பட்ட தானம்.
கேள்வி : எல்லோருக்கும் எது சாஸ்திரம்?
பதில் : யுக்தி
கேள்வி : தாயார் யார்?
பதில் : பசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : எது பலம்?
பதில் : தைரியம்.
கேள்வி : யார் யமன்?
பதில் : கவனமில்லாமலிருப்பது.
கேள்வி : எங்கு விஷம் உள்ளது?
பதில் : துஷ்டர்களிடம்.
கேள்வி : மனிதர்களுக்கு எது தீட்டு?
பதில் : கடன்.
கேள்வி : பயமில்லாதது எது?
பதில் : பற்றின்மை.
கேள்வி : எல்லோருக்கும் பயம் எது?
பதில் : பணம்தான்.
கேள்வி : பாதகம் எது?
பதில் : ஹிம்சை
கேள்வி : பகவானுக்குப் பிரியமானவன் எவன்?
பதில் : தானும் பயப்படாமல், பிறரையும் பயப்படச் செய்யாதவன்.
கேள்வி : எதிலிருந்து சித்தி ஏற்படும்?
புதில் : தவத்திலிருந்து.
கேள்வி : எதனால் புத்தி ஏற்படுகிறது?
பதில் : பெயரியோர்களைச் சேவிப்பதனால்.
கேள்வி : பெரியோர் யார்?
பதில் : தருமத்தின் சொரூபத்தை அறிந்தவர்கள்.
கேள்வி : புகழ்அடைந்தவனுக்கு மரணத்தைவிட எது கொடியது?
பதில் : அபகீர்த்தி
கேள்வி : எல்லாச் சுகங்களுக்கும் காரணம் எது?
பதில் : புண்ணியம்.
கேள்வி : எதிலிருந்து துக்கம் ஏற்படுகிறது?
பதில் : பாவத்திலிருந்து.
கேள்வி : எவன் உயர் நிலையடைகிறான்?
பதில் : வணக்கமுள்ளவன்.
கேள்வி : எவன் தாழ்வு அடைவான்?
பதில் : கர்வம் உள்ளவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : நம்பத்தகாதவன் எவன்?
பதில் : அடிக்கடி பொய் சொல்லுகிறவன்.
கேள்வி : சிஷ்யன் யார்?
பதில் : வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்
கேள்வி : எவன் கெட்டுப்போனவன்?
பதில் : தர்மகாரியத்திலிருந்து நழுவியவன்.
கேள்வி : சரீரம் உள்ளவர்களுக்கு எது பாக்கியம்?
பதில் : பிணியில்லாமை.
கேள்வி : செய்ய முடியாதது எது?
பதில் : எப்பொழுதும் மனதை அடக்குவது.
கேள்வி : உலகைப் போஷிக்கிறவன் யார்?
பதில் : சூரியன்.
கேள்வி : எவன் சூரன்?
பதில் : பயந்தவர்களைக் காப்பாற்றுகிறவன்.
கேள்வி : இன்னவிதம் என்று சொல்லமுடியாதது எது?
பதில் : மாயை.
கேள்வி : அன்னத்தைப் பெறத் தகுந்தவன் எவன்?
பதில் : பசியுள்ளவன்.
கேள்வி : எவர் பூஜிக்கத் தகுந்தவர்?
பதில் : பகவானுடைய அவதாரம்.
கேள்வி : பகவானான மகேசுவரன் யார்?
பதில் : சிவமும் விஸ்ணுவும் சேர்ந்த ஒரே உருவமான சங்கரநாராயணன்.
கேள்வி : பகவத்பக்திக்குப் பலன் எது?
பதில் : அவனுடைய லோகத்தையும் சொரூபத்தையும் நேரில் காண்பது.
கேள்வி : மோட்சம் எது?
பதில் : அஞ்ஞான நாசம்.
கேள்வி : எல்லா வேதங்களுக்கும் காரணம் எது?
பதில் : ஓம் என்ற பிரணவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மில்க்வைற் கனகராசா

11-02-1927 - 22-07-1998



ஒரு தனிநபர் குடிசைக் கைத் தொழிலாகவிருந்த மில்க்வைற்றை நூறுக்கும் மேற்பட்டவர்களுக்குத் தொழில் வாய்ப்பளித்தவொரு தொழில் நிறுவனமாகக் குறுகிய காலத்துள் வளர்த்தெடுத்தமை திரு கனகராசா அவர்களின் விடா முயற்சிக்கும் கடின உழைப்புக்கும் நிர்வாகத்திறமைக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

யாழ்ப்பாணத்துக் கைத்தொழில் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படும் திரு கனகராசா அவர்கள், சவர்க்கார உற்பத்தி உட்படப் பல துறைகளில் சுதேசப் பொருள்களின் பாவனையை அறிமுகப்படுத்தி ஊக்குவித்தார். வேப்பம் விதைகளிலிருந்து வேப்பம் தூபம், வேப்பம் சவர்க்காரம் போன்றவற்றை உற்பத்தி செய்து மக்கள் இயற்கையோடிணைந்த வாழ்வு வாழ ஊக்குவித்தமை கைத்தொழிலில் அவர் செய்தவொரு புரட்சி எனலாம்.

தாம் ஈட்டிய பொருளின் ஒரு பகுதியை விவசாய சமூக சமய விடயங்களில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுவதற்குச் செலவு செய்தமை சமுதாய மேம்பாட்டில் அவருக்கிருந்த அபிமானத்தைச் சுட்டி நின்றது.

சமூகத்தில் அறிவு விருத்தி ஏற்படப் பல்கலைப் புலவர் க.சி.குலரத்தினம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மில்க்வைற் செய்தி என்னும் தரமான பத்திரிகையொன்றை மாதந்தோறும் வெளியிட்டு இலவசமாக விநியோகித்து அறிவுப் பரம்பலுக்கு உதவினார். அறிஞர்களையும் கலைஞர்களையும் ஆதரித்துப் பாராட்டிக் கௌரவிக்க அவர் என்றும் பின்னின்றதில்லை.

கனகராசா அவர்கள் சமுதாயத்திற்கு ஆற்றிய பணியை மெச்சிய மக்களும் நிறுவனங்களும் அவரைத் தேசாபிமானி, சிவதர்ம வள்ளல், சிவநெறிப்புரவலர், பூலோகக் கற்பகதரு காவலர், தால காவலர் எனப் பல பட்டங்களை அளித்துத் தமது மகிழ்வையும் நன்றியையும் வெளிப்படுத்திக் கெண்டனர்.

அமெரிக்காவில் வெளியாகும் மார்க்குயிஸ் 1982-1983 ஆண்டு இதழ் பட்டியலிட்ட உலகப் பெரியார்கள் வரிசையில் திருவாளர் கனகராசா அவர்களும் இடம்பெற்றுள்ளார்.

அவரது இறப்புக்குப் பின்னர் - தேகாந்த நிலையில் 2000-10-06 திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் ஆண்டு தோறும் அவரது நினைவு தினத்தைக் கொண்டாடி வருகின்றது. இவ்வாண்டு அவரது நினைவு நாளில் அவர் வெளியிட்ட ப்ரச்நோத்ர ரத்ன மாலிகா என்ற இச் சிறு பிரசுரத்தை மீள்பதிப்புச் செய்து வெளியிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதி[illegible]ஸ். யாழ்ப்பாணம்.